அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை




ஆடி 2011
ISSN 1837-6460
மலர் 3 இதழ் 7

# கறுப்பு ஜுலை (ஜுலை 23, 1983)

**கறுப்பு ஜுலை சூத்திரதாரிகளில் ஒருவரே யாழ் மாவட்டத்தின் தற்போதைய இராணுவ தளபதி!**

ஈழத் தமிழர்களின் வாழ்வில் ஆழப்பதிந்த ரணங்களில் ஒன்றான கறுப்பு ஜுலை இனப்படுகொலைக்கு வித்திட்ட, 1983 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு மறைமுகமாக உதவினார் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டிருந்த இராணுவ அதிகாரியே தற்போதைய யாழ் பிராந்திய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த அத்துருசிங்க எனத் தெரியவந்துள்ளது.

மேஜர் ஜெனரல் மகிந்த அத்துருசிங்க 1983ஆம் ஆண்டு ஜுலை படுகொலைகள் இடம்பெற்றபோது வெலிக்கடை சிறைச்சாலையின் பாதுகாப்பிற்கு பொறுப்பாகவிருந்த பீரங்கிப் படைப் பிரிவின் லெப்டினனாக பணியாற்றினார் என்ற தகவலை, அன்றைய தாக்குதலில் உயிர் பிழைத்தவரும், அன்றைய அரசியல் கைதியாகவும் இருந்தவருமான தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டுள்ளார்.

யாழ்ப் பிராந்திய கட்டளைத் தளபதியின் கீழ் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் அதிஉயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து யாழ்ப்பாண மக்கள் சிலருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

1983 ஜுலை 27ம் திகதி இடம்பெற்ற இந்த மிலேச்சத்தனமான கொலைகளைத் தடுப்பதற்காக இராணுவத்தினரின் உதவியைப் பெற்றுத்தருமாறு சிறைச்சாலை அதிகாரிகள் விடுத்த கோரிக்கை அப்போதைய லெப்டினான மகிந்த அத்துருசிங்கவினால் கவனத்தில்கொள்ளப்படவில்லை.

தாக்குதலில் காயமடைந்த அரசியல் கைதிகளை அவசர விபத்து பிரிவிற்கு அழைத்துச் சென்று சிகிச்சையளிக்க இடமளிக்காது அத்துருசிங்க தடையை ஏற்படுத்தியதாகவும் தெரியவந்துள்ளது. ஜெனீவா இணக்கப்பாடுகளுக்கு அமைய எதிரிகள் காயமடைந்தாலும் அவர்களுக்கு உடனடியாக சிகிச்சையளிக்க மற்றைய தரப்பு கடமைப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலைத் தாக்குதலில் காயமடைந்த தமிழ் கைதிகளை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதைத் தடுத்ததன் மூலம் மகிந்த அத்துருசிங்க, சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மீறியுள்ளார்.

இராணுவச் சட்டத்திற்கு அமைய இது போர்க் குற்றமாக கருதப்படுகிறது. ஜுலை தாக்குதலில் 33 தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டதுடன் உடனடி சிகிச்சையளிக்கப் படாமையினாலேயே இவர்கள் பெரும்பாலானோர் உயிரிழந்தனர்.

கொலைகள் சம்பந்தமாக நடத்தப்பட்ட நீதவான் விசாரணைகளின் போது, சாட்சியமளித்த அப்போதைய பதில் சிறைச்சாலை ஆணையாளர் சீ.டி.ஜயன்ஸ், வெலிக்கடை சிறைச்சாலை அத்தியட்சகர் லியோத சில்வா, சிறைச்சாலை வைத்திய அதிகாரி தொன் பேரின்பநாயகம் ஆகியோரின் வாக்குமூலங்களில், லெப்டினன் மகிந்த அத்துருசிங்கவின் குற்றச் செயற்பாடுகள் தொடர்பாக முக்கியத் தகவல்கள் வெளியாகியுள்ளன.♦

## “கொல்வதற்கான உரிமையை வழங்கினார் கோத்தாபய“ – இறுதிப்போரில் பங்கேற்ற படைஅதிகாரியின் பதறவைக்கும் வாக்குமூலம்



சிறிலங்கா அதிபரால் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்பட்டு சரணடையும் தமிழ்ப் போராளித் தலைவர்களின் கதையை முடித்து விடுமாறு சிறிலங்காவின் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச, பிரிகேடியர் சவீந்திர சில்வாவுக்குப் பணித்திருந்ததாக சனல்-4 தொலைகாட்சியிடம் சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் சாட்சியம் அளித்துள்ளார்.

அதேவேளை, 58வது டிவிசனில் பணியாற்றிய மற்றொரு சிறிலங்கா இராணுவ அதிகாரி, தேவையான நடவடிக்கைகளை எடுத்து வேலையை முடித்து விடுமாறு பிரிகேடியர் சவீந்திர சில்வாவுக்கு கோத்தாபய ராஜபக்ச உத்தரவிட்டிருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

இது படையினர் கொலைகளைச் செய்வதற்கு வழங்கப்பட்ட அனுமதி என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சனல்-4 தொலைக்காட்சி சிறிலங்காவின் போர்க்குற்றங்கள் தொடர்பான மேலும் இரண்டு புதிய சாட்சிகளின் செவ்விகளை நேற்று வெளியிட்டுள்ளது.

இதில் இறுதிக்கட்டத் தாக்குதலில் சிறிலங்கா இராணுவத்தின் 58வது டிவிசன் படைப்பிரிவில் பங்கெடுத்த பெர்னான்டோ என்ற படை அதிகாரி, சிறிலங்கா படையினரால் பெண்களும் சிறுவர்களும் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பதை விபரித்துள்ளார்.

அவர் சனல்-4 தொலைக்காட்சிக்கு அளித்துள்ள செவ்வியில் அரசபடையினரால் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் சிறிய ஆயுதங்களால் இலக்கு வைக்கப்பட்டதாகக் கூறியுள்ளார்.

“நான் வெளியில் இருந்து பார்க்கும் போது அவர்களை வெறுமனே கொடூரமான விலங்குகள் என்று தான் நினைக்கிறேன். அவர்களுடைய இதயங்களில் மனித உணர்வு இல்லை. விலங்குகள் போன்று தான் உணர்கிறேன்.

அவர்கள் பொதுமக்கள் மீது கண்டபடி சுட்டார்கள். பொதுமக்களைக் குத்தினார்கள். அவர்களின் நாக்குகளை அறுத்தார்கள். பெண்களின் மார்பகங்களை வெட்டினார்கள்.

இவற்றையெல்லாம் நான் எனது கண்களால் பார்த்தேன். சிறுவர்கள் இறந்து கிடந்ததை கண்டேன்.

பெருமளவு சிறுவர்கள் இறந்து கிடந்தார்கள். அவர்கள் அப்பாவிகள். பெருமளவு முதியவர்களும் கொல்லப்பட்டுக் கிடந்தனர்.

நீரேரியைக் கடந்து வந்தபோது பெண்கள், சிறுவர்கள் என்று பொதுமக்கள் மீது படையினர் சுட்டார்கள். அவர்கள் புலிப்போராளிகள் அல்ல. சாதாரண பொதுமக்கள். சாதாரண குடிமக்கள் கொல்லப்பட்டதை எனது கண்களால் பார்த்தேன்.

தாயும் மூன்று குழந்தைகளுமாக ஒரு சிறிய குடும்பம் தப்பிச் சென்று கொண்டிருந்ததை நான் கண்டேன். அவர்களில் ஒரு சிறுவனின் காலில் சூடுபட்டு கிழே விழுந்தார்.

அந்தக் குழந்தையை நான் இந்தக் கைகளால் தூக்கினேன். தாயார் கதறி அழுதார். அந்தத் துன்பத்தின் மத்தியிலும் என்னை நன்றியுணர்வோடு பார்த்தனர்.

ஒரு நாள் ஆறு படையினர் தமிழ்ப் பெண் ஒருவரை

தொடர்ச்சி 3 ம் பக்கம்

## "கொல்வதற்கான உரிமையை வழங்கினார் கோத்தாபய" ...தொடர்ச்சி

பாலியல் வன்புணர்வு செய்வதை எனது கண்களால் கண்டேன்.

தான் ஒரு நடைப்பிணம் போலவே இருக்கிறேன்.

ஒரு தமிழ் பெண்ணை வன்புணர்வு செய்ய வேண்டுமானால் அவளை அவர்களால் அடிக்க முடியும். அவளது பெற்றோர் அதைத் தடுக்க முனைந்தால் அவர்களை அடிக்கவோ கொல்லவோ முடியும்.

அங்கு அவர்களின் ஆட்சி தான் இருந்தது.

போர் முனையில் இருந்த படையினரின் இதயங்கள் கற்களாகிப் போயிருந்தன.

இரத்தம், கொலைகள், மரணம் என்று பார்த்துப் பார்த்து அவர்கள் மனிதஉணர்வுகளை இழந்து விட்டார்கள்.

அவர்களை என்னால் காட்டேறிகள் என்று தான் கூற முடியும்.

தலை மற்றும் பிற உடற்பாகங்கள் இல்லாத பெண்களின் உடல்களை நான் கண்டேன்.
இறந்து கிடந்த தாய் மற்றும் குழந்தையின் சடலங்களையும் பார்த்தேன், ஆனால் குழுந்தையின் தலை இருக்கவில்லை.

போரின் இறுதிக் கட்டத்தில் பெரும் எண்ணிக்கையான சிறுவர்களும், பெண்களும், ஆண்களும் கொல்லப்பட்டனர்.

புதுமாத்தளனில் மட்டும் 1500இற்கும் அதிகமான பொதுமக்கள் இறந்து கிடந்ததை நான் கண்டேன்.

அவை அனைத்தையும் அவர்களால் அடக்கம் செய்ய முடியவில்லை. அவற்றை ஒன்றாக அடுக்கி புல்டோசர் மூலம் மண் பரப்பி ஒரு அணைபோல அமைத்து அவை புதைக்கப்பட்டன.

புதுமாத்தளனில் 1500 சடலங்களை நான் கண்டேன். ஆனால் அதுபோல 50,000 இற்கும் அதிகமான மக்களுக்கு நடந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

போரின் இறுதிக்கட்டத்தில் நான் கடைசியாக நுழைந்த போது புதுமாத்தளன் பகுதி முழுவதும் சடலங்களாக நிறைந்திருந்தது.

அவற்றை அழிப்பதற்கு அவர்களுக்கு பாரிய வாகனம் ஒன்றைப் பெற்றனர். சடலங்களின் மீது மண்ணைப் போட்டு நிரப்பினார்கள்.

சில இடங்களுக்கு நீங்கள் செல்ல முடியாதளவுக்கு அழிந்து போன உடல்களில் இருந்து துர்நாற்றம் வீசும்.

அவர்கள் வெறும் அப்பாவி குடிமக்கள். போரிடும் தரப்பினருடன் எந்தத் தொடர்பும் இல்லாதவர்கள்.

அவர்களின் இறப்புக்காக தான் அழுகிறேன். இப்போது அதை வெளியே சொல்ல முடிவு செய்துள்ளேன்.

ஏனென்றால் 2009 மே மாதம் கடற்கரையின் ஒரு சிறு துண்டுப் பகுதிக்குள் நடந்த கொடூரமான குற்றங்கள் குறித்து உலகம் தெரிந்து கொள்ள வேண்டும்.

நான் நன்றாக இருக்கிறேன்.நான் பல சடலங்களைப் பார்த்துள்ளேன். காயமடைந்தவர்கள் பலரைப் பார்த்துள்ளேன். பல வன்புணர்வுக் காட்சிகளைக் கண்டுள்ளேன்.

எனது இதயத்தை திறந்து வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகவே நான் நன்றாக இருக்கிறேன்." என்று அவர் மேலும் கூறியுள்ளார். ♦

## பொதுசனத் தொடர்பாடல் குழுவின் அறிக்கை

பொதுசன தொடர்பாடல் குழுவும், அரசியல் குழுவும் தமது தொடர்ச்சியான செயற்பாடுகளின் மூலம் கடந்த ஜுலை மாதம் 4ம் திகதி ABC தொலைக்காட்சியில் "ஸ்ரீலங்காவின் தொலைக்களம்" ஆவணப்படம் ஒளிபரப்பப்படுவது தொடர்பாக விளம்பரம் செய்வதில் முனைப்பாக ஈடுபட்டனர். இது தொர்பாக இரு செய்தி அறிக்கைகளையும் வெளியிட்டிருந்தனர்.

இவ் அறிக்கைகளை தொடர்ந்து ABC, SBS வானொலிகள் தமிழர் பேரவையை நேர்காணல் செய்தனர். இவை தொடர்பாக பல தரப்பட்ட செய்திகள், கருத்தாய்வுகள ஆசிரியருக்கான கடிதங்கள் முக்கிய பத்திரிகைகளில் வெளியானதுடன், இதுபற்றி மெல்போர்ன் 3AW வானெலியில் கருத்துப் பகிர்வுகளும் இடம்பெற்றது.

ABC தொலைக்காட்சி இணையதள பக்கத்தில் இதுதொர்பான செய்திகளுக்கு எமது பேரவை ATC இணையதள பக்கம் தொடர்பு படுத்தப்பட்டிருந்நதது. இந்த ஆவணப்பட வெளியீட்டிற்குப் பின்னர், எமது இணையதள

பிரசாரத்திலும் தமிழர் அல்லாதவர்களும் ஒப்பமிடுவதற்கான மாற்றங்கள் செய்யப்பட்டன. இந்த பிரசாரத்தில் 1500 பேர் வரை முறையீட்டில் ஒப்பமிட்டுள்ளனர். இவை தொடர்பாக பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பதில் அளித்துள்ளனர்.

### கிரிகெட் புறக்கணிப்பு

எமது பேரவை பொதுசன தொடர்பாடல் குழுவும், அரசியல் குழுவும் இவ் விடயம் தொடர்பாக இங்குள்ள முக்கிய பிரமுகர்களுக்கு "ஸ்ரீலங்காவின் தொலைக்களம்" ஆவணப்படத்துடன் கடிதங்கள் அனுப்பியுள்ளனர். இந்த முயற்சிக்கு ஆதரவாக பல சந்திப்புகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

♦

## நியூ சவுத் வேல்ஸ் மாநில அறிக்கை

...தொடர்ச்சி

எமது பேரவை பிரதிநிதிகள் கேள்விகள் கேட்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து கூட்ட முடிவின் பின்னர் கலந்து உரையாடுவதற்கும் வாய்ப்பு கிடைத்தது.

" ஸ்ரீலங்காவின் தொலைக்களம்" ஆவணப்பட காட்சிகளுக்குப் பின்னரும், ஸ்ரீலங்காவின் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக ஐநா அறிஞர் குழு, சர்வதேச நெருக்கடிக்கான குழுவினர் வெளியிட்டுள்ள அறிக்கைகளைத் தொடர்ந்து லிபரல் கூட்டமைப்பு இது தொடர்பான சர்வதேச சுயாதீன விசாரணைக்கு ஆதரவு வழங்குமா என்ற கேள்வி முன் வைக்கப்பட்டது.

இது தொடர்பாக மதிதகு ஜுலியா பிஷப் கருத்துக் கூறுகையில், அந்த ஆவணப்படம் மிகவும் கொடூரமானது, அதிர்ச்சி தரக்கூடியது. இதற்கு ஐநா தான் வழிகோல வேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்குப் பின்னர் திரு பான் கி மூன் சுயாதீன விசாரணைக்கு அழைப்பு விடுத்தால், கூட்டமைப்பினர் இதற்கு ஆதரவு வழங்குவோம் என கூறினார் ♦



ATC representatives attended Ms Michelle Rowland's luncheon with Hon Tony Burke MP—Minister for Environment and sustainability

# நியூ சவுத் வேல்ஸ் மாநில அறிக்கை

**“சிறீலங்காவின் தொலைக்களம்” ABC தொலைக்காட்சியில்:**

எமது பேரவையின் மாநில அரசியல் குழவினரும், பொதுசன தொடர்பு குழுவினரும்இ இங்குள்ள

அரசியல்வாதிகள், கொள்கை வகுப்பாளர்கள், முக்கிய பிரமுகர்கள் போன்றோருக்கு இந்த ஆவணப்படத்தினை ABC தொலைக்காட்சியில் பார்த்து, நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள் என்று கேட்டு மின்னஞ்சல்கள் அனுப்பியிருந்தோம்.

இதுவிடயம் தொடர்பான எமது பேரவை உறுப்பினர்கள் ஏனைய அமைப்புகளுடனும், தனிப்பட்டவர்களுடனும் இணைந்து துண்டுப் பிரசுங்களை வடிவமைத்து, அச்சிட்டு விநியோ-கித்தோம்.

**நியு சவுத் வேல்ஸ் தொழிற்கட்சி மாநாடு:**

சிட்னி நகராட்சி மண்டபத்தில் நடைபெற்ற நியு சவுத் வேல்ஸ் தொழிற்கட்சி மாநாட்டில் எமது மாநில பேரவை பிரதிநிதிகளும் பங்குபற்றினர். மிே-சல் றோலன்ட், எட் ஹுயுசிக், நேதன் றீஸ் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் உரைகளில் அவுஸ்திரேலிய தமிழர் பேரவையின் செயற்பாடுகளைக் குறிப்பிட்டும், “ ஸ்ரீலங்காவின் தொலைக்களம்” ஆவணப்பட காட்சிகள் பற்றியும் பேசியிருந்தனர். எமது பேரவை பிரதிநிதிகள் மேலும்

பல தொழிற்கட்சிப் பிரமுகர்களைச் சந்திப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருந்தது.

**கிரிகெட் புறக்கணிப்பு**

இந்த முயற்சிக்கு ஆதரவாக பல சந்திப்புகள் நடைபெற்றுள்ளன. இவ் விடயம் தொடர்பாக தமிழ் சமூகத்தினரின் உணர்வு குறித்து சகல தரப்புகளுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. தொடர்ந்தும் ஒரு குழுவினர் இவ்விடயம் தொடர்பாக முனைப்புடன் செயற்பட்டுவருகின்றனர்.

**வெளிவிவகார அமைச்சருடன் பேரவை உறுப்பினர்கள் சந்திப்பு:**

தொழிற் கட்சியின் ஓபன் கிளைக் கூட்டத்தில் எமது பேரவை உறுப்பினர் திருமதி. ஸ்ரீபாலன் அவர்கள் பங்குபற்றினார். இக் கூட்டத்தில் சிறப்புப் பேச்சாளராக வெளிவிவகார அமைச்சர் மதிதகு. கெவின் றட் அவர்கள் கலந்துகொண்டார். அப்போது ஸ்ரீலங்காவின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அவுஸ்திரேலியாவின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து திருமதி. ஸ்ரீபாலன் அவர்கள் வெளிவிவகார அமைச்சரிடம் கேள்வி கேட்பதற்கு

ஒரு வாய்ப்பு கிடைத்தது.

**நிழல் வெளிவிவகார அமைச்சருடன் பேரவை உறுப்பினர்கள் சந்திப்பு:**

சர்வதேச விடயங்களுக்கான அவுஸ்திரேலிய நி-றுவன - கூட்டமைப்பின் வெளிவிவகார

கொள்கை அமைப்பு ஏற்பாடு செய்திருந்த நி-கழ்வொன்றில் எமது பேரவை பிரதிநிதிகள், உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். நிழல் வெளிவிவகார அமைச்சர் மதிதகு ஜுலியா பிஷப் சிறப்புப் பேச்சாளராக கலந்துகொண்டார். வெளிவிவகார கொள்கை தொடர்பாக நன்கு அறிந்து தொள்வதற்கு இந் நிகழ்வு உதவியாக அமைந்தது.



Hon Julie Bishop –Shadow Foreign Minister at AIIA event

தொடர்ச்சி 4 ம் பக்கம்

# AN IMPORTANT MESSAGE!
## From The Australian Tamil Congress

Australian Bureau of Statistics

# 2011 அவுஸ்திரேலிய குடிசன மதிப்பீடு
## Australian Census of Population and Housing

# நாம் எம்மைத் தமிழர் என்று அடையாளப்படுத்துவோம்
# Say we are Tamils

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை, அவுஸ்திரேலியாவில் நடைபெறும் குடிசன மதிப்பீட்டு விபர சேகரிப்பு, இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது. அவுஸ்திரேலியாவில் வாழும் ஒவ்வொரு தமிழரும் இப் பத்திரங்களைப் பூர்த்திசெய்யும் போது, அதிலுள்ள கேள்விகளில் மூன்று கேள்விகளுக்குப் பின்வரும் பதில்களையளிப்பதன் மூலம், நாம் எம்மைத் தமிழர் என்று அடையாளப்படுத்துவதுடன், இங்கு வாழும் எமது தமிழ்ச் சமுதாயத்திற்கும், எமது வருங்கால சந்ததியினருக்கும் பல சலுகைகளையும் பெறமுடியும்.

அவுஸ்திரேலிய தமிழர் பேரவை, குடிசன மதிப்பீட்டு அலுவலகத்தினரோடு கலந்து ஆராய்ந்து பெற்ற ஆலோசனைகளின் பிரகாரம் இவற்றை உங்களுக்கு அறியத் தருகிறோம்.

**Question 12 - Country of Birth**

**Answer - If you were born in the island of Sri Lanka please write "CEYLON"**

நீங்கள் பிறந்த நாடு எது என்று கேட்கிறார்கள். இலங்கையில் பிறந்தவர்கள் இலங்கை என்றுதான் பதிலளிக்க வேண்டும். பதிலை 'SRI LANKA' என்று எழுதாமல் 'CEYLON' என்று எழுதுங்கள்.

12 In which country was the person born?
- Remember to mark box like this: —

Australia ▶ Go to 14
England
New Zealand
Italy
Viet Nam
Scotland
Greece
Other – please specify
CEYLON

**Question 16 - Does the person speak a language other than English at home?**

**Answer - "TAMIL"**

நீங்கள் வீட்டில் ஆங்கிலத்தைத் தவிர வேறு ஏதாவது மொழியில் பேசுகிறீர்களா என்று கேட்கிறார்கள். ஆம் தமிழர் நாம் தமிழில் பேசுகிறோம் என்பதைத் தெளிவாகச் சொல்லுங்கள். 'TAMIL' என்று எழுதுங்கள்.

16 Does the person speak a language other than English at home?
- Mark one box only.
- If more than one language other than English, write the one that is spoken most often.
- Remember to mark box like this: —

No, English only ▶ Go to 18
Yes, Italian
Yes, Greek
Yes, Cantonese
Yes, Arabic
Yes, Vietnamese
Yes, Mandarin
Yes, other – please specify
TAMIL

**Question 18 - What is the person's ancestry? - Answer - "TAMIL"**

**This question relates to our heritage. Tamils have a long and colourful heritage.**

உங்களது பூர்வீகம் என்ன என்று கேட்கிறார்கள். நாம் தமிழர், எமது பூர்வீகம் தமிழ் என்பதைத் தெட்டத் தெளிவாகச் சொல்லவேண்டும். எனவே 'TAMIL' என்று எழுதுங்கள்.

18 What is the person's ancestry?
- Provide up to two ancestries only.
- Examples of Other – please specify are: GREEK, VIETNAMESE, HMONG, DUTCH, KURDISH, MAORI, LEBANESE, AUSTRALIAN SOUTH SEA ISLANDER.
- See page 7 of the Census Guide for more information.
- Remember to mark boxes like this: —

English
Irish
Italian
German
Chinese
Scottish
Australian
Other – please specify
TAMIL

மேலதிக விபரங்களுக்கும், மதிப்பீட்டுப் பத்திரத்தை பூர்த்தி செய்வதற்கு உதவி வேண்டுமாயினும் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.

If you have any queries or need assistance to complete the form, Please call us on **1300 799 515**

A Unified Voice for All Tamils census@australiantamilcongress.com www.australiantamilcongress.com

# குவீன்ஸ்லாந்து மா நில அறிக்கை.

**சமூக தடுப்புமுகாம்களில் உள்ள புதிய வரவுகளுக்கான உதவிகள்:**

எமது தமிழர் பேரவை உறுப்பினர்கள் இங்கு பிரிஸ்பனில் உள்ள சமூக தடுப்பு முகாம்களில் உள்ள புதிய வரவுகளுக்கு நல்ல ஆரோக்கியமான சூழலை உருவாக்கி அவர்களுக்கு வேண்டிய உதவி-களை வழங்குவதில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக எமது பேரவை உறுப்பினர்கள் தொடர்ச்சியாக அங்குள்ள குடும்பங்களைச் சந்தித்து அவர்களுக்கு வேண்டிய பிரயாண வசதிகளுக்கும், உடனடித் தேவைகளை களுக்கும் உதவி வருகின்றனர்.

**குடிவரவு ஒன்றுகூடல் 13 ஜுலை 2011 புதன்கிழமை:**

13 ஜுலை 2011 புதன்கிழமை இங்கு நடைடிபற்ற குடிவரவு ஒன்றுகூடலில் எமது பேரவை உறுப்பினர்களும் பங்குபற்றினர். இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள்

ரிரேசா கம்ரோ, ஸ்கொட் மொரிஸன், நிழல் குடிவரவு அமைச்சர் ஆகியோர் சிறப்புரை

ஆற்றினார்கள்.

**பல்லினகலாச்சார விருந்துபசாரம்:**

குடிவரவு, பிரஜாவுரிமை அமைச்சர் மதிதகு கிறிஸ் பிறவுன் பா.உ, அவர்கள் உடனான

பல்லின கலாச்சார இராப்போசன விருந்துபசார நி-கழ்வொன்றினை கடந்த ஜுலை 15ந்

திகதி மோர்றன் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு கிறகம் பேரர்ட் அவர்கள்

ஏற்பாடு செய்திருந்தார்.

இந் நிகழ்வில் எமது தமிழர் பேரவை உறுப்பினர்களும் பற்குபற்றினர். எமது பேரவை

உறுப்பினர்கள் அமைச்சருடன் அகதிகள் விடயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு

நல்லதொரு சந்தர்ப்பமாக அமைந்ததுடன், அவரிடம் எமது கோரிக்கைகளை கையளிப்

பதற்கும் வாய்ப்பாக இருந்தது.

**குடிவரவு இணைப்புக் குழு:**

‘ பல்லினகலாச்சாரம்’ தொடர்பான பொதுமக்கள் கருத்தறியும் நிகழ்வொன்று கடந்த

ஜுலை 11ந் திகதி குயின்ஸ்லாந்து பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது. இதன்

குழு உறுப்பினர்களாக ரிரேசா கம்ரோ, மரியா வம்வாகிநவ், ரோனி ஸப்பியா ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட்டனர்.

**“ ஶ்ரீலங்காவின் தொலைக்களம்” ஆவணப்பட காட்சிகள்:**

எமது தமிழர் பேரவையினர்
பின்வரும் ஸ்தாபனங்களுடன் இணைந்து இந்த

ஆவணபடக் காட்சிகளை ஒழுங்குசெய்து நடாத்தியுள்ளது.

- மன்னிப்பு சபை : ஜுன் 8 புனித போல் அங்கிலிக்கள் தேவாலயம், ஸ்ப்விச்.
- சிறப்பு பேச்சாளர் – திரு ஸேயின் நியுமன், பா.உ
- சோஸலிஸ்ட் ஒன்றியம்: ஜுன் 23
- ஶ்ரீலங்கா நீதிக்கான ஒன்றியம் - குயின்ஸ்லாந்து தேவாலயங்கள் அனைத்துக்கும் ஆவண பிரதிகள் அனுப்பப்பட்டன.
- கத்தோலிக்க நீதிக்கும் சமாதானத்துக்குமான அமைப்பின் கிளைகள்.
- அங்கிலிக்கன்: சமூக பொறுப்பாண்மைக் குழுக்கள்.
- யுனைட்டிங் சேர்ச்: சர்வதேச மிஷன்கள்.

# அரசியல் குழுவின் அறிக்கை

**அவுஸ்திரேலியத் ததொலைக்காட்சியில் (ஏ.பீ.சீ) ஒளிபரப்பான "இலங்கையின் கொலைகளம்" ஒளித்தொகுப்பை 600, 000 ற்கும் மேலான மக்கள் பார்த்திருந்தனர்.**

இந்த ஒளிபரப்பைத் தொடடர்ந்து எமதபது பேரவையின் அரசியல் குழு உறுப்பினர்கள் அனைத்து பாராளுமமன்ற உறுப்பினர்களளையும் தொடர்பு கொண்டு அவர்களின் கருத்தை வெளிப்படையாகச் சொல்லுமாறு கேட்டிருந்தோம்.

இதுவரை காலமும் மௌனம் சாதித்து வந்த எமது வெளிநாட்டமைச்சர் திரு கெவின் ரட், இந்த ஒளிபபரப்பின் பின் 'இலங்கை அரசு இந்தக் கொலைகளிற்கு பதில் சொல்ல வேண்டும் என கூறியிருந்தார்.

மேலும் பசுமைக் கட்சியின் தலைவர் செனற்றர் பொப். ப்ரௌன் அவர்களால் கொண்டு வரப்பட்ட இலங்கையில் நடந்த போர்க்குற்றங்களிற்கான தீர்மானம் பாராளுமன்றத்தில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை ஆதரவு**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தற்போது இலங்கையில் தமிழர்களைப் பிரதிநிதித்துகப் படுத்ததும் ஒரு அரசியல் கட்சியாக உள்ளது.எமது மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அவர்களிற்கு எம்மாலான உதவியைச் செய்வதது எமதது கடமையாகும். இதை கருத்தில் கொண்டு கடந்த மாதம் எடம் பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சாரத்திற்கு எமது பேரவை அவர்களிற்கு நிதியுதவி அளித்திருந்தது.

கிரிக்கெட்டை புறக்கணிப்போம்

போர்க்குற்றங்கள் புரிந்த இலங்கை அரசின் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தும் வரை அவர்களுடன் எந்த ஒரு நாடும் கிரிக்கெட் விளையாடக் கூடாதென எமது பேரவை கேட்டுக் கொள்கின்றது. அதை செயற்படுத்தும் முழு முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது.

**பொதுநலவாய நாடுகள் குழுக் கூட்டம்**

இந்த வருடம் பொதுநலவாய நாடுகளின் கூட்டம் அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெற இருப்பது அனைவரும் அறிந்ததே. இலங்கை அரசு கட்டவிழ்த்த போர்க்குற்றங்களிற்காக நீதி கிடைக்கும் வரை அந்நாட்டை இக்குழுவிலிருந்து தற்காலிகமாக நீக்குவதற்கு எமது பேரவை முயற்சிகள் எடுத்து வருகின்றது.♦

## விக்டோறிய மாநில அறிக்கை

எமது மாநிலத்தில் பேரவையிநனால் சேர்க்கப்பட்ட நிதியின் ஒரு பகுதியை இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு தொண்டு நிறுவனத்திற்கு வழங்கினோம். இந்தத் தொண்டு நிறுவனம் செட்டிப் பாளையம், திருப்பாலுகமம் என்கிற ஊர்களில் சிறுவர் அநாதை இல்லங்களை நடாத்தி வருகின்றது. இதில் சுமார் 112 சிறுவர் சிறுமியர் வாழ்ந்து வருகின்றனர்.

அத்துடன் எமது மாநிலத்தின் சார்பாக கணிசமான ஒரு தொகை இலங்கையிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அனுப்பப்பட்டிருந்தது.♦





SWO orphanages

# 'சிறிலங்காவின் கொலைக்களம்' : அவுஸ்ரேலியாவின் அதிர்வலைகள்

சிறிலங்காவில் இடம்பெற்ற வெளிப்படையான யுத்தக் குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என அவுஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த அரசியல்வாதிகள் கேட்டுள்ளனர்.

சிறிலங்காவில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்புணர்வுகள், துன்புறுத்தல்கள், சித்திரவதைகள் மற்றும் மனிதப் படுகொலைகள் போன்றவற்றை உள்ளடக்கிய ஆவணப்படம் அவுஸ்திரேலியாவின் ABC1's Four Corners தொலைக்காட்சியில் திங்கள் இரவன்று காண்பிக்கப்பட்டது.

சிறிலங்காவில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போது 40,000 பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கான சாட்சியங்கள் உள்ளதாக கடந்த ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை வல்லுனர் குழுவால் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது.

பிரிட்டனின் சனல் 04 தொலைக்காட்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள திரைப்படத்தில் தமிழ்ப் புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழிருந்த பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியுள்ளமை மற்றும் பாதுகாப்பு வலயங்கள் என அறிவிக்கப்பட்ட இடங்களில் தஞ்சம் புகுந்திருந்த தமிழ் மக்கள் மீது சிறிலங்காப் படையினர் இடைவிடாத எறிகணைத் தாக்குதல்களை மேற்கொள்கின்றமை போன்ற காட்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியா அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரு தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிறிலங்காவில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபை மீளவும் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என அவுஸ்திரேலிய நாட்டின் வெளியுறவு அமைச்சர் கெவின் றுட் தெரிவித்துள்ளார்.

"மனித உரிமைகள் சபையானது சிறிலங்கா விவகாரம் தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தத் தவறியள்ளதால், உடனடியாக இது தொடர்பாக மீள் விசாரணைகளை மேற்கொள்ள முன்வருவதுடன், சிறிலங்காவில் இடம்பெற்ற யுத்த மீறல்கள் தொடர்பான உண்மையான நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏதுவான சுயாதீன விசாரணையை மேற்கொள்ள முன்வரவேண்டும்" என அவுஸ்திரெலிய வெளியுறவு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அடிப்படையில், அவுஸ்திரேலியாவானது மனித உரிமை மற்றும் அனைத்துலக மனித உரிமைகள் சட்டம் தொடர்பில் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ள ஒரு நாடாகும்.

சனல் 04 தொலைக்காட்சிச் சேவையால் வெளியிடப்பட்டுள்ள காணொளி தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

"இதில் காண்பிக்கப்பட்டுள்ள அனைத்துக் காட்சிகளும் உண்மையாக இருக்கும் என்பதைக் கூறமுடியாது ஆனால் இதில் காண்பிக்கப்பட்டுள்ள காட்சிகள் மனதை மிகவும் குழப்புகின்றன. யுத்தம் என்பது எப்போதும் பயங்கரமான சம்பவங்களையே கொண்டிருக்கும். ஆனால் எந்தவொரு யுத்தம் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், போர்ச் சட்டங்கள் மற்றும் அனைத்துலக மனித உரிமைச் சட்டங்கள் என்பன அதில் மதிக்கப்பட வேண்டும்" என அவுஸ்திரேலியாவின் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் சட்டவாளருமான மெலிசா பார்க் தெரிவித்துள்ளார்.

"சனல் 04 நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள காணொலிக் காட்சிகளில் சில அனைத்துலக போர்ச் சட்ட விதிமுறைகளை மீறி மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றங்களை உள்ளடக்கியுள்ளது (தொடர்ச்சி)

# அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை



*Postal Address:*
*P.O. BOX 22 COMO WA 6952 AUSTRALIA*
*Tel: 1300 660 629*
*Web: http://www.australiantamilcongress.com*

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் ஒரு பகுதியினரே அரசியலில் ஆர்வம் காட்டிவந்திருக்கின்றார்கள். அவர்களும் தனித்தனியாகவே செயற்பட்டு வந்துள்ளார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களின் முயற்சிகள் யாவும் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதுவரை காலமும் அமைதியாக இருந்த மக்களையும், இளஞ்சந்ததியினரையும் அரசியலில் ஈடுபட வைத்து எமது தமிழ்ச் சமூகத்தின் ஒருங்கிணைந்த நோக்கத்தை உலகுக்கு எடுத்துக் காட்டுவது எமது கடமை.

அவுஸ்திரேலிய தமிழ் பேரவை பல அரசியல் வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது, எமது அமைப்பினரின் நோக்கம் நிறைவேறுவதற்க்கு எமது பேரவையின் அங்கத்துவர்களின் எண்ணிக்கையும், பொருள் பலமும் முக்கியமானது என்பது மறுக்கவோ, மறைக்கமுடியாத உண்மை. அதனால் உங்கள் ஒவ்வொருவரையும் எமது பேரவையில் இணைந்து எம்மைப் பலப்படுத்தும்படி வேண்டி நிற்கின்றோம். எமது பேரவையின் எதிர்காலத்தை வழி நடத்தும் பொறுப்பு ஒவ்வொரு அங்கத்தவர்களின் கைகளிலும் உள்ளது.

உங்களது உதவி சிறியதாகவோ பெரியதாகவோ இருப்பினும் எமது நீண்ட கால, இடைத்தர கால, குறுகிய கால குறிக்கோள்களை அடைவதற்கு மிக முக்கியமானது.

நீதிக்காகவும் அமைதிக்காகவும் நாம் தொடங்கிய பயணத்தில் உங்களையும் உங்களது நண்பர்களையும் உறவினர்களையும் இணைத்துக் கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம்.

எமது தேசிய சஞ்சிகைக்கான கட்டுரைகள் செய்திகளை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்

newsletter@australiantamilcongress.com

பொறுப்பு **மறுப்பு**

இந்த வெளியீட்டில் வரும் கட்டுரைகள், ஆக்கங்கள் அனைத்தும் அவுஸ்திரேலியத் தமிழர் பேரவையின் கொள்கைகளையோ நோக்கங்களையோ பிரதிபலிப்பனவல்ல. அவை அந்தந்த எழுத்தாளர்களின் கருத்துக்களை பிரதிபலிப்பனவாகவே இருக்கும்.

## அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை:
## சமாதானத்தையும் நீதியையும் நோக்கிய அறப்போர்

**எம் கொள்கை**

“மக்களால் மக்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட மக்களின் பேரவையே அவுஸ்திரேலியத் தமிழ் பேரவையாகும். எமது கொள்கையானது நீதியையும் சமாதானத்தையும் அடிப்படையாக வைத்து எமது மக்களின் வளமான, சுதந்திரமான, சமத்துவமான, பாதுகாப்பான அமைதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எமது மக்களின் ஒருங்கிணைந்த குரலாக ஒலிப்பதுவாகும்.”

**எம் இலட்சியம்**

“அவுஸ்திரேலியத் தமிழ் பேரவை அவுஸ்திரேலிய சமூகத்தில் அங்கம் வகிக்கும் தமிழர்களின் ஆக்க பூர்வமான பங்களிப்பை ஊக்குவிப்பதாகவும், தமிழர்களுக்கு முக்கியானற்றை வெளிக் கொணர்வதாகவும், அவுஸ்திரேலியப் பண்புகளை நிலைநிறுத்துவதாவும், மற்றைய சமூகங்கள், அரசுகள், அமைப்புக்கள் அனைத்தையும் தமிழர்களின் சமூக, பண்பாட்டு, அரசியல் அக்கறைகள், கவலைகளில் ஈடுபடுத்துவதாகவும் அமைவதே எம் இலட்சியம்.”

**எம் குறிக்கோள்**

“எமது குறிக்கோளானது உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களின் மனித உரிமைகளுக்காகக ஒருங்கிணைந்த குரல் கொடுப்பது, தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைப் பற்றிய அறிவியலை மக்களிடையே ஏற்படுத்துவது, எமது மக்களின் பாதுகாப்பிற்கும், வளமையான வாழ்விற்கும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவது, எமது எதிர்கால சந்ததியினரிற்கு எமது நாட்டில் நடந்த இனப்படுகொலையைப் பற்றி எடுத்துக்கூறுவது என்பவையாகும்.”